★ மட்டு. பெரிய போரதீவில் காவலரண்கள் தாக்கி அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

மட்டு. பெரிய போரதீவு விசேட அதிரடிப்படையினரின் முகாம் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி காவலரண் ஒன்றைக் கைப்பற்றி தாக்கி அழித்துள்ளனர்.

மேலும் ஒரு காவலரண் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலுக்குள்ளாகி சேதமானது.

கடந்தவெள்ளியன்று இரவு 11 45 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது முகாமிலிருந்து சுமார் 500 யார் தூரத்திலிருந்த காவலரண்களே தாக்குதலுக்குள்ளாகின.

(6ம் பக்கம் பார்க்க

விலை ரூபா 5.00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 13 இதழ் 81

யாழ்ப்பாணம் புதன்கிழமை 26 - 4 - 1995

# கடற்படையினருக்கு கப்பல்கள் கொள்வனவு!

(கொழும்பு)

கடற்படையினருக்கு பெருமளவு கப்பல்களை கொள்வனவு செய்ய கடற்படைத் தளபதி தீர்மானித்துள்ளார்.

சீனாவிலிருந்து செப்ரெம்பர் மாதமளவில் மிகப்பெரிய பீரங்கிப் படகொன்றும் மேலும் இரு பீரங்கிப்படகும் இவ்வருட இறுதிக்குள்ளும் மற்றும் தரையிறங்கும் கப்பல்கள் (லான்டிங் கிறுவ்) இரண்டும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

வடக்கில் பூநகரி காரைநகர், மன்னார், முல்லைத்தீவு, ஆனையிறவு படைத்தளங்கள் புலிகளின் முற்றுகைக்குட்பட்டுள்ளதால் இவற்றுக்கு கடல்

(5ம் பக்கம் பார்க்க)

குடியிருப்புக்களை நோக்கி

# மன்னாரில் விமானத்தாக்குதல்

# ஏழு பொதுமக்கள் உயிரிழப்பு!

## மணலாறிலும் நேற்று குண்டு வீச்சு

(மன்னார்)

மன்னாரில் நேற்று முன்தினம் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் நான்கு பொதுமக்களும் 3 குழந்தைகளும் பலியானார்கள் நால்வர் படுகாயமடைந்தனர் பாலர் பாடசாலை உட்பட மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன

மன்னார் விடத்தல்தீவில் நேற்று முன்தினம் மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்துக் குண்டுவீச்சு விமானங்கள் கடும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின. இச்சம்பவத்தில் மூன்று குழந்தைகள் உட்பட ஏழு பொதுமக்கள் பலியானதாக அப்பகுதி மக்களை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. தெரிவித்தது.

(6-ம் பக்கம் பார்க்க)

## “இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது”

### தளபதி ஜெரி டி சில்வா பேட்டி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத்தீர்வு ஒருபோதும் சாத்தியமாகாது என இராணுவ தளபதி ஜெரி டி சில்வா பி. பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸியை சேர்ந்த அலெக்ஸ் தொம்சனுக்கு வழங்கியபேட்டியில் ஜெரி டி. சில்வா மேலும் கூறுகையில்; இவ்விதமான பிரச்னையுள்ள நாடுகளில், குறிப்பாக ஆப்கானிஸ்தான், வியட்நாம் போன்ற நாடுகளில் பெரிய அளவு சக்தியிருந்தும் அங்கு இரத்தக்களரியே ஏற்பட்டது. பலன் எதுவும் கிட்டவில்லை.

இராணுவத்தீர்வு சாத்தியமில்லை என்பதை நான் உறுதிபட நம்புபவன் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை மோதல் தவிர்ப்புகாலத்தில் இந்த நிருபருக்கு ஜனாதிபதி சந்திரிகா தெரிவிக்கையில்; யுத்த நிறுத்தம் அமுலிலுள்ள போதிலும் எனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக புலனாய்வுதுறை அதிகாரிகள் எச்சரித்திருப்பதாக தெரிவித்திருந்தார். சி-ரி

## கொழும்பில் மேலதிக துருப்புகள் குவிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகருக்கு மேலதிக துருப்புக்கள் அனுப்பப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் புலிகளின் தற்கொலைப் படையினர் தாக்குதல்களை மேற்கொள்ளலாமெனக் கருதப்படுவதால் மேலதிக படையினர் அங்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். மேலும் அவசர நிலை பாதுகாப்பு கொழும்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க!

## பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு சுகயீனம்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலர் திரு. சந்திரானந்த டி சில்வா மாரடைப்பு ஏற்பட்டு அண்மையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தற்போது இவர் அவசர தேவை தவிர்ந்த எந்த விடயத்திலும் பங்கு பற்றுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாரடைப்பு நோய் என சந்தேகிக்கப்பட்ட நிலையில்

(6ம் பக்கம் பார்க்க

## கொழும்பில் முக்கிய பகுதிகள் தாக்கப்படலாம்

(கொழும்பு)

கொழும்பில் முக்கிய பகுதிகளை விடுதலைப் புலிகள் தாக்கலாம் எனப் புலனாய்வுத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் கடற்படைத் தலைமையகம், நாடாளுமன்றக் கட்டடம், ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் குறிப்பிட்ட சிரேஷ்ட பாதுகாப்புப் படை அதிகாரிகளையும் இலக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

★ வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டிலிருந்து

## ராணுவ தளபாட கொள்வனவுக்கு நிதி ஒதுக்க அமைச்சர்கள் இணக்கம்!

(கொழும்பு)

வரவு - செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பெருமளவு நிதியை இராணுவ தளபாட கொள்வனவிற்கு ஒதுக்க அமைச்சர்கள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

முப்படைத் தளபதிகளுடனான பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் இராணுவ தளபாட கொள்வனவிற்காக உடனடியாக பல கோடி ரூபா ஒதுக்குமாறு படைத்தளபதிகள் ஜனாதிபதி சந்திரிகாவை வற்புறுத்தியிருந்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி சந்திரிகா உடனடியாக அமைச்சரவையை கூட்டி ஆயுத கொள்வனவிற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதற்காக பெரு

(6ம் பக்கம் பார்க்க)

## பூநகரி படை முகாமை புலிகள் தாக்குவார்கள்!

### புலனாய்வு பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

பூநகரி படை முகாம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் எனப் புலனாய்வுத்துறையினர் தெரிவிததுள்ளனர்

இந்த முகாமைச் சுற்றி 800க்கும் மேற்பட்ட புலிகள் அணி திரண்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதேவேளை கிழக்கிலும் பல

(6ம் பக்கம்· பார்க்க)

தந்தை செல்வா காட்டிய வழியில் அவரது இலட்சியக் கனவை வென்றெடுப்போம்.

கண்கவர் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய அழகிய தங்க நகைகளின் வர்ண மாளிகை

சிறி நதியா நகை மாடம் 2 (G), அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

மில்க்வைற் சலவைத்தூள்

மில்க்வைற் சலவைத் தூளின் அதிசக்திமிக்க நுரை வளம் துணியின் இழைகளின் ஊடாகவும் செயற்பட்டு அழுக்கையும் எண்ணெய்ப் பிசுக்கையும் துரிதமாக அகற்றுகிறது. துணிக்குப் பளிச்சிடும் வெண்மையும் தருகிறது. சலவைத்தூள் 25 வெற்றுப் பக்கற்றுக்கு ஒரு அப்பியாசக் கொப்பி. — மில்க்வைற்

(ஏ-4896)

# பொது விடுமுறைகள் விரைவில் குறைக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் பொதுவிடுமுறை தினங்களை குறைப்பது பற்றி விரைவில் அரச உயர்மட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

இதுபற்றி ஆராய பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல இக்குழுவிற்கு தலைமை தாங்கவுள்ளார்.

அதிகளவு விடுமுறைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பாதிப்பதாகவும் வெளிநாட்டு முதலீடுகளைக் குறைக்க செய்யலாமென இம் முதலீட்டாளர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்ததையடுத்தே மேற்கண்டவாறு முடிவு எடுக்கப்பட்டது க

# தெற்கில் புதிதாக சிறைச்சாலை அமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் கைதிகளின் எண்ணிக்கை வெகுவேகமாக அதிகரித்து வருவதையடுத்து குருவிட்ட பிரதேசத்தில் 100 மில்லியன் ரூபா செலவி் புதிதாக சிறைச்சாலை ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்

1993ல் 5 ஆயிரம் பேராக இருந்த கைதிகளின் எண்ணிக்கை 1994ல் 7 ஆயிரமாக அதிகரித்துள்ளதையடுத்து பெரும் நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே உள்ள 14 சிறைச்சாலைகள் தற்போதைய நிலையை சமாளிக்கபோதுமானதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். க-சி

## கடவுள் சுவாமிகள் ஜயந்தி விழா

[அரியாலை]

ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சிவ முருகுபிள்ளை கடவுள் சுவாமிகளின் 90-வது ஜயந்திவிழா எதிர்வரும் 28-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் நடைபெறவுள்ளது.

அன்று விசேட பூசைகள் - பஜனைகள், ஆத்மீகப பேருரைகள், மகேஸ்வரப் பூசை ஆகியன இடம்பெறவுள்ளன. -59

# கனடாவில் மாதம் இருதமிழர் மர்மமான முறையில் கொலை

(ரொன்ரோ)

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மத்தியில் மர்ம மரணங்கள் சமீபகாலமாக அதிகரித்து வருவதாக கனேடியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி பொலிஸார் மேலும் தெரிவிக்கையில்: மாதாந்தம் ஆககுறைந்தது இரண்டு இலங்கைத்தமிழர்கள் மிகவும் மர்மமான முறையில் கொலை செய்யப்படுகிறார்கள். இக்கொலைகள் பெரும்பாலும் மொன்டிறியேல் நகரிலும், ரொரன்டோ நகரிலுமே நடைபெறுகின்றன.

கொலை செய்யப்படுவர்கள் முதலில் கடத்தப்பட்டேபின்பு சில நாட்களின் பின்பு மிகவும் மர்மமான முறையில் கொலை செய்யப்படுகின்றார்கள். கொலை செய்யப்படும் பலரது சடலங்களை கொலையாளிகள் பொலிஸாரோ உறவினரோ அடையாளம் காணமுடியாதபடி சிதைத்து விடுகின்றார்கள். கொலை செய்யப்படுபவர்கள், கடத்தப்படும் இடத்திலிருந்து பல கிலோ மீட்டர் தூரத்திற்கப்பாலே அவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றது

இச்சடலங்கள் பெரும்பாலும ரயில் பாதைகள், கடற்கரைகள், பாலங்களுக்கடியில் போடப்பட்டிருக்கின்றன.

சில குறிப்பிட்ட கும்பலே இந்த மர்மக் கொலைகளைச் செய்து வருகின்றதாம். இவர்கள் பற்றிய இரகசியத்தகவல்கள் தற்போது பொலிஸாருக்கு கிடைத்துள்ளது. தக்க நேரத்தில் இவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். -வி-சி

## இன்று

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 26ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் விசேட அபிஷேகம். பூசை, ஆராதனைகள் வழிபாடுகளுடன் இடம் பெறும். 154

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளராக திருமதி றே இநதயநாதன் நியமிக்கப்பட்டுள்ளார் சண்டிலிப்பாய் கல்வி கோட்ட பிரதி கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய திரு.த.துரைசிங்கம் நல்லூர் கல்விக்கோட்ட பிரதி கல்விப்பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். 72

காணமல் போனோர் விவகாரம்:

# 300 அதிகாரிகள் பற்றி பலரும் புகார்

(கொழும்பு)

காணமற் போனவர்கள் பற்றிய முறைபபாடுகளில கடந்த அரசாங்க காலத்தில் உயர் பதவிகள் வகித்த 300 பேரின் பெயர்கள் தற்பொழுது காணமற் போனவர்கள் பற்றி விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருப்பதாக, லங்காதீப பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர்கள், மகாணசபை உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், படை உயர் அதிகாரிகளும் இந்த அதிகாரிகளுள் அடங்குவார்கள்.

பாடசாலைஅதிபர்கள் கிராம சேவகர்கள், அமைச்சர்கள் போன்றோர் இதுபற்றி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்தள்ளார்கள் என்றும் ,லங்காதீப, மேலும் தெரிவித்துள்ளது. ம-சி

## தட்டச்சு பயிற்சி வகுப்புகள்

(கொழும்புத்துறை)

வடமராட்சி கிழக்குப்பகுதிலுள்ள அம்பனில் போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுருக்கெழுத்து, தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 154

# மண்டைதீவிலிருந்து துப்பாக்கிச்சூடு

(அரியாலை)

மண்டைதீவு காவலரணிலிருந்து நேற்று காலை 6-00மணியளவில் பண்ணைகடற் பரப்பை நோக்கி படையினர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் கடலில் பாய்ந்து தப்பி வந்தனர்,

கரையோரமுள்ள அம்மன் ஆலயத்திற்கு செவ்வாய்க்கிழமை வழிபாட்டுக்கு வந்தவர்கள்- உடன் திரும்பிச் சென்றனர்- நேற்று முன்தினம் இரவு 8மணிக்கு நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் குருநகர்தொடர் பாடியைச்

(5-ம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதல்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டு கடற்பரப்பில் நேற்றுக் முன்தினம்காலைரோந்துசென்ற ஸ்ரீலங்காகடற்படையினர்மீனவர் மீது பீரங்கித் தாக்குதலை சுமார் 15 நிமிட நேரம் மேற்கொண்டனர். அச்சமடைந்த மீனவர்கள் கடலில் குதித்து கரை சேர்ந்தனர்.

தொடர்ச்சியாக தினமும் இவ்வித தாக்குதல்கள் கடலில் இடம்பெற்று வருவதனல் கடலுக்கு சென்று மீன்பிடிக்க மீனவர் அச்சமடைகின்றார்கள். 160

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995—04—26

புதன இரவு

8-02 தந்தை செல்வா நினைவு நாளையொட்டி சிறப்பு நிகழ்ச்சி
8-20 வாத்திய கானங்கள்
3-30 செய்திகள்
8-40 நாடகம் ந. கிருஷ்ணு எழுதிய ''உறவுகள் பூக்கும்''

1995—04—27

வியாழன் காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 விடுதலை கீதங்கள்
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995—04—26

புதன் மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சி கீதம்
5-10 புகியவை
5-15 மழலைகளுக்காக
5-30 இசையும் கதையும்
6-00 சிந்தனைக்கு சில விஞடிகள்
6-02 பொன்விளையும் பூமி
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 கேள்வி பதில் விளையாட்டுத் தொடர் பானவை
6-25 என் தெரிவு
6-30 ர்கு மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

பாராளுமன்றில் தமிழீழ குரலை
முன்னெடுத்துச்சென்ற சாத்வீகத் தலைவர்
அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை
நினைவு கூருவோம்

பரமேஸ்வரா சந்தியில் பல்பொருள் வாணிபகூடம்:

சிவன் ஸ்ரோர்ஸ்

பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி

தமிழினத்தின் விடுதலைக்கு தமிழீழம்தான் ஒரே வழியென,
18 ஆண்டுகளுக்கு முன் முழங்கிய தந்தை ★
எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை நினைவுகூருவோம்.

யாழ். நகரில் நம்பிககைக்குரிய தங்க நகைகளை
மாற்றுக குறையாத தங்கத்தில் செய்து வழங்கும் நிறுவனம் :

நதியா நகை மாடம் -

2, சந்தோசம் வீதி.
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

தமிழினத்தின் விடுதலையை முன்னெடுத்துச் செல்ல
இறுதி வரை போராடிய தந்தை!!!

எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை
18 வது சிரார்த்த தினத்தில் நினைவுகூருவோம்

✶ பட்டுக் குடை ✶ கொடி ✶ ஆலவட்டம் ✶ வாகுமல் அனைத்துக்கும்

ஞானம் ஆடையகம் -

34, பெரிய கடை,
(சோதியா வீதி)
யாழ்ப்பாணம்.

இன்று நினைவு தினம்

# ஒப்பந்தங்களால் பயனில்லை என்பதை உணர்ந்திருந்தவர் 'தந்தை செல்வா'

1956-பொதுத் தேர்தலில் பதவிக்கு வந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய சமயம் காலிமுகத் திடலில் அடையாள எதிர்ப்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்திய தந்தை செல்வா ஆகஸ்ட் திங்களில் திருமலையில் நடந்த தமிழரசுக் கட்சியின் சிறப்பு மாநாட்டில் வைத்து தமிழ் மக்களின் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு அரசுக்கு ஓராண்டு காலக்கெடு விதித்திருந்தார். மேற்படி காலக்கெடுவிற்குள் அரசு ஒரு தீர்வுக்கு வராதவிடத்து இயக்கம் சாத்வீக சட்டமறுப்புப போராட்டத்தில் குதிக்கும் எனவும் அறிவித்திருந்தார்.

தொடக்கத்தில் இந்தக் காலக்கெடுவை அசட்டை செய்து வந்த பிரதமர், அதன் இறுதிக் கட்டம் நெருங்கிய போதே தந்தை செல்வாவைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்துப் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் 1957 யூலை 26-ல் பிராந்திய சபைக்கான ''பண்டா - செல்வா'' உடன்படிக்கையை ஓர் இடைக்கால ஏற்பாடாகச் செய்துகொண்டார்,

''பண்டா-செல்வா'' உடன்படிக்கையைத் தமது கட்சி பதவிக்கு வந்தால் நடைமுறைப்படுத்துவதாக திருமதி சிறிமாவோ அம்மையார் 1960-ல் தந்தை செல்வா



வுடன் இணங்கிக்கொண்டது தந்தை செல்வாவின் இரண்டாவது ஒப்பந்தமாகும். இது கையெழுத்தில் வரையப்படாத கனவான் ஒப்பந்தமாகும். மூன்றும் ஒப்பந்தம் 1965-மார்ச் இறுதி வாரத்தில் மாவட்ட சபைகளுக்காக டட்லி சேனநாயக்காவுடன் செய்துகொண்ட ''டட்லி-செல்வா'' உடன்படிக்கையாகும்.

இம்மூன்று ஒப்பந்தங்களுமே நடைமுறைப்படுத்தப்படுத்தப்படவில்லை. 1972 ல் புதிய குடியரசு யாப்பு தயாரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இறுதி வாய்ப்பாக அதனைப் பயன்படுத்த அவாவிய தந்தை செல்வா தாம் சமர்ப்

**சா.ஆ. தருமரத்தினம்**

பித்த ஆறு அம்ச குறைந்தபட்சக் கோரிக்கைக்குத் தானும் பதவியில் இருந்த முக்கூட்டரசு பதில் ஏதும் அனுப்பாத நிலையில் தமது காங்கேசன்துறை உறுப்பினர் பதவியைத் துறந்து ஒரு இடைத்தேர்தலை நடாத்துமாறு நிர்ப்பந்தித்திருந்தார்.

அந்த இடைத்தேர்தலில் தாம் வெற்றி பெற்றதும் ''முன்னிருந்ததும் பின் போர்த்துக்கேயரிடம் போரில் இழக்கப்பட்டதுமான தமிழீழ அரசை மீள்விததுப் புதுப்பிக்கப்போவதாக அவர் அறைகூவல் விடுத்திருந்தார். நாடாளுமன்ற கன்னிப்பேச்சிலும் அதனையே உரைத்த தந்தை செல்வா தமிழர் ஐக்கிய முன்னணியின் தேசிய மாநாட்டை வட்டுக்கோட்டையில் கூட்டி அதனை ஒரு பிரகடன வாசகமாக, அதில் விரிவாக விளம்பியிருந்தார். ஆதிமுதல் தமது பொது வாழ்வில் முன்வைத்த காலைப் பின்வாங்கிக் கொள்ளாதவர் தந்தை செல்வா.

## தந்தையே செல்வா தாளினைப் பணிந்தோம்

உண்மை நேர்மை பகைக்கஞ் சாமை
தீர்க்க தரிசனம் மிக்க செயற்றிறன்
அடக்கம் நிறைந்த மெலிந்த உருவம்
முகத்தில் ஜொலிக்கும் ஒளியின் அழகு
அகத்தின் தூய்மைக் கோர்நேர்ச் சான்று
பதவியும் புகழும் மடக்க விடாதவர்
எதிரியின் மிரட்டலுக் கஞ்சா நெஞ்சினன்
விழைவது உணர்ந்து முனைனர் உரைத்தோன்
வாழ்வின் இலக்கு மக்களின் நலனே
செல்வம் சேர்க்கும் கயமை யற்றவர்
சேர்ந்தவர் எவர்க்கும் உதவிடும் இயல்பினர்
அகிம்சை வழியில் நம்பிக்கை இழந்தவர்
ஆயுதப போரும் அமையலா மென்றவர்
தமிழினம் வாழ அயரா துழைத்தவர்
தனிநா டொன்றைக் காண விழைந்தவர்
சமஷ்டியும் கைவரா தென்பதை உணர்ந்தவர்
இலட்சியப் பற்றுடன் இயற்கை யெய்தினன்
இறைவனின் அடியில் இன்பங் கண்டனன்
தந்தையே செல்வா தாளினைப் பணிந்தோம்
தரணியி லென்றும் நாமுனை மறவோம்.

— மாரீசன்

★ எங்கள் மூச்சும் விடுதலை உணர்வும்
தமிழின விடிவை நோக்கி நகரட்டும் என்று
முதலில் கோஷம் எழுப்பிய பெருமகனர்

தந்தை எஸ். ஜே. செல்வநாயகத்தை
நினைவுகூரும் பெருநாள்

சிவஆனந்த கபே,

648, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தந்தை செல்வநாயகத்தை
ஆண்டுகள் பல சென்றாலும் மறப்போமா!

ஈழத் தமிழரின் இன்னல் களைந்த
இலட்சியவாதி தந்தை செல்வா!

அன்னராஜா பல்பொருள் 'களஞ்சியம்

158, (356) கிட்டுசாலை, (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம்.

★ தமிழினத்தின் தந்தை அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை
இந்நூற்றுண்டின் நாயகனை போற்றி நினைவு கூருவோம்!

சுவை தரும்
ஐஸ்கிறீம் வகைக்கு

லிங்கம் குளிர்களி நிலையம்

(லிங்கம் கூல்பார்)

வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

★ எங்கள் வாழ்வும் வளமும் மங்காத தமிழென சங்காரம் முழங்கிய
தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தை நினைவு கூருகிறோம்.
வர்ணமிகு பட்டுப் பருத்திப் புடவைகளுக்கு வற்றாத ஊற்றாக பரிணமிக்கும் புடவைக்கடல்

திருமாட்டி புடவைக்கடல்

122, மின்சாரநிலைய வீதி, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

தமிழினத்தின் விடிவுக்கு தமிழீழம்தான் ஒரே வழியென முழக்கமிட்ட
தந்தை செல்வாவை நினைவுகூருவது எம்கடமை.

சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளையும் நியாய விலையில் பெறுவதற்கு

ஜீவா மருந்தகம், -

பல்கலைக்கழகம் முன்பாக,
சேர். பொன் இராமநாதன்வீதி,
திருநெல்வேலி.

### மணிவாக்கு

நண்பனின் பாராட்டு மொழியில் அர்த்தமில்லை. பகைவனின் கண்டன மொழியிலும் அர்த்தமில்லை. நண்பனின்கண்டனமும் பகைவனின் பாராட்டும் கவனிக்கத்தக்கது.

அலெக்சாண்டர்போல்

# 25,000 படையினரைத் தேட புதிய படையணி அமைப்பு

(கொழும்பு)

இராணுவத்தைவிட்டு தப்பி ஓடிய 25 ஆயிரத்திற்கும் அதிகமானோரை தேடிக் கண்டுபிடிப்பதற்காக விசேட படையணி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ் அமைச்சு இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; இவ்வாறு தப்பியோடியவர்களில் நான்காயிரத்து ஐநூற்றுக்கும் அதிகமானோர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கொலை' கொள்ளை. பாலியல்வன்முறைகள் போன்ற பல சம்பவங்களுடன் நெருக்கமான தொடர்புண்டு, இவர்களால் தெற்கில் பல பிரச்னைகள் தோன்றியுள்ளன.

இவர்கள் 25,000 பேரும் இராணுவத்தில் நவீனரக ஆயுதங்களில் சிறந்த பயிற்சி பெற்றுள்ளதால் தெற்கில் தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து கொள்ளும் சாத்தியமிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

மேற்படி படையினரைக் கண்டுபிடிக்க தற்போது துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிக

### பலத்த மழை

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு, வலி மேற்கு ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களாகபலத்த மழை பெய்து வருகின்றது.

இதேவேளை பிரதான வீதிகளில் கடும்மழையினால் குண்டும் குழியுமாகவுள்ள இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் போக்குவரத்து சீர்கேடு நிலவுகின்றது. பலவீதிகள் மிகுந்த சீர்கேடு அடைந்துள்ளதால் பிரயாணிகள் சிரமமடைகின்றனர், 72

## நமது நோக்கு

### அறிக்கையின் அவசியம்

“சமாதானத்திற்கான கதவை நாம் ஒரேயடியாக மூடிவிடவில்லை!'' எனப் புலிகளின் இலண்டன் சர்வதேசச் செயலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

விளக்கங்கள் கொடுத்து காலக்கெடு வைத்து அரசின் தாமதப்படுத்தும் தந்திரோபாயங்களைச் சுட்டிக்காட்டி வெறும் வாய்ப்பந்தல் அறிக்கைகளால் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை என்பதைப் புட்டுக்காட்டவே அதிர்ச்சி வைத்தியமாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகநேரிட்டது

ஆனால் அரசோ வழமை போல தனது பிரசார சாதனங்கள் மூலம் சமாதானத்திற்கு இடையூறு விளைந்து விட்டது எனக் கூக்குரல் எழுப்பியது.

மேலோட்டமான அரசின் அறிக்கைகளை மாத்திரம் கவனத்தில் எடுத்துச் சில நாடுகள் அறிக்கை விட்டன.

சர்வதேச அரங்கில் தமது புவிசார் அரசியல் இலக்குகளில் கண்வைத்துச் செயற்படும் நாடுகளின் அக்கறை எவற்றில் இருக்கும் என்பதை நாம் மறப்பதற்கில்லை.

அரசின் பிரசாரம் நீண்ட நாட்களுக்கு நின்று பிடிக்காது என்பதையும், சர்வதேச நாடுகள் பின்னர் உணர்ந்து செயற்பட்டதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சர்வதேச சமூகம் இலங்கையில் அமைதி பிறக்க வேண்டும் என விருப்பம் கொண்டிருப்பதை வரவேற்கும் அறிக்கை இலங்கை அரசின் செயற்பாடுகளையும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரச பிரசார வேசம் தவறான கணிப்பீடுகளை ஏற்படுத்தாது இருக்க மறுப்புப் பிரசாரம் அவசியம்.

அந்த வகையில் புலிகளின் சர்வதேச செயலகம் விடுத்த அறிக்கை பல சந்தேகங்களைப் போக்கும் என நம்புகிறோம்

நிரந்தரப் போர் நிறுத்தம் பற்றிப் புலிகள் அடிக்கடி கேட்டு வந்தனர். ஆனால் அரசோ மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை மாத்திரம் வைத்துக் கொண்டு தன்னைப்பலப் படுத்துவதோடு மாத்திரமல்லாது மக்களின் அன்றாடப் பிரச்சனைகளைத்தீர்க்காது தட்டிக் கழித்து வந்த செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் உணர வேண்டும்!

### பலதும் பத்தும்

#### சின்னத்தங்கம்

கடலில் தமதுதிறமைகளை காட்டி 'வருகிறார்களல்லவா பெண் புலிகள்? இந்தவேளையில்... வணிகக்கப்பல்களை வைத்து நடாத்திய பெண்கள் நினைவுக்கு வருகிறார்கள்

வல்வெட்டித்துறையில்... வைரமுத்துவின் மகள்தான் சின்னத்தங்கம். இவரைச் சரவணமுத்துவிற்கு விவா செய்தபோது கொடுத்த அன்பளிப்புகள் என்ன தெரியுமோ? சில வணிகக் கப்பல்கள் தான்!

கணவன் இறந்தபோது சின்னத்தங்கம் சோர்ந்து விடவில்லை. கப்பல் கட்டுதல் செலுத்துதல், கப்பற் போக்குவரத்து நிர்வாகம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டினார். சுபத்திரையம்மா, மதுரை மீனாட்சி, தங்கவேலாயுதம் போன்றோர் பேருதவி புரிந்தார்களாம். யாரவர்கள்? அவர் வைத்திருந்த கப்பல்களின் பெயர்கள் தான் அவை...!

— மயூரன்

### இராசி பலன்

26 04-1995

புதன்கிழமை

**(தமிழுக்கு சித்திரை-13)**

துவாதசி பின்னிரவு 9-04 வரை, பூரட்டாதி பி.ப 3-44 வரை, சித்தாமிர்த யோகம், இராகுகாலம் காலை 11-59 01-09 வரை, சுபநேரம் 7-29-8-59 வரை.

மேடம்: வாக்குப் பகை, தாழ்ந்த நிலை, அகௌரவம்

இடபம்; பிறர்உதவி, குடும்ப சௌகரியம், கலகலப்பு.

மிதுனம்: உல்லாசபயணம். அதிகாரிகள் சிறப்பு. சுபவிரயம்.

கடகம்; உறவில் விரிசல், உணர்ச்சி வசப்படல், உடல் உபாதை.

சிங்கம்: மனசஞ்சலம், சகோதரபகை, அலைச்சல்.

கன்னி; பெரியோர்ஆசி வஸ்திரலாபம், காரியசித்தி.

துலாம்; தொழில்லாபம், பொறுப்பான பதவி, குடும்ப சுகம்.

விருச்சிகம்; முயற்சித்தடை, வசதிக்குறைவு, கோபவார்த்தை.

தனுசு: அடம்பிடித்தல், அமைதிக்குறைவு, மறதி.

மகரம்: அதிர்ஸ்டம் நழுவுதல், பணமுடை, மனக்கவலை.

கும்பம்: பயனற்றசெயல்; தொழில் பாதிப்பு, அகால உணவு.

மீனம்: முற்போக்கு சிந்தனை. தொழில் சிறப்பு, பயணம்.

— ஜோஸ்யர்

# பிராந்திய தளபதிகளைசந்திக்க 'ஜெரி' வட - கிழக்கு விஜயம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு படை முகாம்களுக்கு இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கடந்த வெள்ளிக்கிழமை திடீர் விஜயங்களை மேற்கொண்டு பிராந்திய தளபதிகளை சந்தித்து பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்ந்துள்ளார்.

இவருடன் மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்ணாண்டோ, இராணுவ தலைமையக இயக்குநர் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகளும் வட-கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று தற்போதைய நிலைபற்றிஆராய்ந்துள்ளனர்

வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய தாக்குதல்கள் குறித்தும் பிராந்திய தளபதிகளுக்கு ஜெரி டி சில்வா விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை பாதுகாப்பு கவுன்சில் தற்போது அடிக்கடி கூடி வடக்கு கிழக்கு நிலைபற்றி ஆராய்ந்து வருகிறது. வட-கிழக்கு பகுதியில் யுத்தமுனைகளிற்கு தேவைப்படும் இராணுவ தளபாட விபரங்கள் பற்றியும் அறிக்கைகள் அவசர அவசரமாக சமர்ப்பிக்கப் பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டால் அது பொதுமக்களை பெரிய அளவில் பாதிக்கும் என்பதால் புலிகளின் தேர்ந்தெடுக்கப் பட்ட முக்கிய நிலைகள் மீது மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களை நடாத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் புலிகளின் கடும் தாக்குதல் தொடருமானால் தாங்களும் கடும் தாக்குதலில் இறங்க வேண்டுமென படைத் தளபதிகள் கருதுகின்றனர். எனவே நிலைமைகளுக்கேற்ப படை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிராந்திய தளபதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனராம். சி

# படையினருக்கு எந்தவிதத்திலும் துரோகமிழைக்கமாட்டேன்!

சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

பாதுகாப்பு படையினருக்கு எந்தவிதத்திலும் துரோகம் இழைக்கப் போவதில்லை என்றும் சமாதான முயற்சிகள் தொடரப்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலால் காயமடைந்த படையினரை கொழும்புஇராணுவ ஆஸ்பத்திரிக்கு சென்றுபார்வையிட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்,

படையினரது சேமநலன் குறித்து விசாரித்ததுடன் அவர்களது சிகிச்சைக்கு விசேட கவனம் செலுத்தும்படியும் வைத்திய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவருடன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலர் திரு. சந்திரானந்த டி சில்வா மற்றும் படை அதிகாரிகளும் படையினரை பார்வையிட்டனர் க-சி

# 14 வருடப் போரில் 5000 ராணுவம் பலி

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு போர் ஆரம்பித்து இதுவரை சுமார் 14 வருடங்களில் 5,000 ற்கும மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

விடுதலைப் புலிகளின் முதல் தாக்குதல் 1981ம் ஆண்டு அக்டோர் மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணத்தில் காங்கேதுறை வீதியில் இடம்பெற்றுள்ளது. சைக்கிள் ஒன்றில வந்த இரு இளைஞர்கள் சுட்டதில் லான்ஸ் கோப்ரல் ஹெவவாசம் மற்றும் திஸரா என்பவர்கள் உயிரிழந்துள்ளனர்,

இந்த இரு இராணுவத்தினரும், கடை ஒன்றுக்கு சென்ற தமது சகவீரருக்காக ஜீப் வண்டியில காத்திருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து புலிகள் 303 ரக ரைபிளையும் இயந்திரத் துப்பாக்கியையும் பறித்துக் கொண்டு சென்றுவிட்டனர்.

சி

### அறிவித்தல் அட்டை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இடம் பெயர்ந்து இயங்கி வரும் தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது சகல கிளைகளிலும் கிளை திறக்கும் நேரம், பூட்டப்படும் நேரம் போன்ற விபரங்களை கொண்ட புதிய அறிவித்தல் அட்டைகளை பொதுமக்கள் நலன் கருதி தொங்கவிட்டுள்ளது, 72

# ராணுவ நடவடிக்கைப் பிரிவு அநுராதபுரத்துக்கு மாற்றம்

(கொழும்பு)

கொழும்பில் இதுவரை இயங்கி வந்த இராணுவத்தின் நடவடிக்கை தலைமைச் செயலகம்நேற்றுமுன்தினம் முதல் அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டது

இந்தச் செயலகத்துக்கு இதுவரை தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படவில்லையென ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

(5ம் பக்கம் பார்க்க)

சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை!
சுட்டெரிப்போம் அதைத் தடுப்பவரை!!

இதயங்களில் நீக்கமற நிறைந்த
தந்தை செல்வாவைப் போற்றுவோம்

சகலவிதமான றேடியோ, ரி. வி. டெக் எலக்றோனிக் பொருட்களை
35 வருட காலமாக திருத்துவதில் பிரபல்யம் பெற்றவர்கள் :

வானொலி மனுவல்,

121, அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

‘சூரியா’ கப்பல் தகர்க்கப்பட்டபோது

# முந்நூறுஅடி உயரத்திற்கு தீப்பிளம்புஎழுந்துமறைந்தது

(திருமலை)

‘‘சூர்யா’’ பீரங்கிப் படகு தகர்க்கப்பட்டபோது பாரிய சத்தத்துடன் வெடித்ததுடன் 300 அடி உயரத்திற்குத் தீப்பிளம்பு எழுந்து மறைந்தது.

19-ம் திகதி நள்ளிரவு 12-45 மணியளவில் திருமலை துறைமுகப்பகுதி வெகு அமைதியாக இருந்தது துறை முகத்தில் மின் விளக்குகள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. துறைமுகத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் 150 மீற்றர் இடைவெளியில் ‘சூர்யாவும்’ வும். ‘ரணசுறு’ வும் நின்றன. எனினும் இக்கப்பல்கள் இருந்த பகுதி இருட்டாகவே காணப்பட்டது.

நள்ளிரவு 12-45 மணியளவில் பாரிய வெடிகுண்டு மூலம் ‘சூர்யா, தகர்க்கப்பட்டது இதன்போது 300 அடி தூரத்திற்கு பெரிய தீச்சுவாலை எழுந்து மறைந்ததை துறை முகத்திலிருந்து 2 கி. மீ தூரத்திலுள்ள சீனன்குடா ‘பிறிமா’ மா ஆலை பாதுகாப்பு ஊழியர்கள் கண்டுள்ளனர். அச்சுவாலை உடனடியாகவே மறைந்துவிட்டது. குண்டு வெடித்த உடனேயே சூர்யா தகர்க்கப்பட்டதால் அக்கப்பல் உடனே நீரினுள் மூழ்கிவிட்டது.

இந்தச் சத்தத்தை திருமலை பிரடறிக் கோட்டையிலிருந்த இராணுவத்தினரும் கேட்டுள்ளனர். இந்தக் குண்டுச் சத்தத்தை தொடர்ந்து எங்கும் மயான அமைதி நிலவியது. ஐந்து நிமிடங்கள் கழித்து, இரண்டாவது குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்தது. ‘ரணசுறு’ கப்பலில் ஒரு பகுதி உடனடியாக நீரில் மூழ்கி மற்றைய பகுதி மிதந்துகொண்டிருந்தது.

கப்பலிலிருந்து உயிரிழந்த மற்றும் காணமல்போனபடையினர் உடனடியாக திருமலை கடற்படை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஏனைய சடலங்களும், காயமடைந்தவர்களையும் உடனடியாக மீட்கமுடியவில்லை. இரவு விடிந்தபின்பே அவை மீட்கப்பட்டன. இருட்டாக இருந்ததால் விடியும் வரை படையினர் காத்திருந்தனர்.

இச்சம்பவம் குறித்து அதிகாலை பி. பி சி. செய்தி கேட்டே பெருமளவு இலங்கையர்கள் அறிந்துகொண்டனர். மறுநாள் காலை 6 மணி இலங்கைச் செய்தியில் இது பற்றி எதுவுமே தெரிவிக்கப்படவில்லை. -சி


எங்கள் இனமும் மொழியும் வாழ வழி சமைத்த செம்மல்
தந்தை செல்வா நினைவைப் போற்றி நினைவு கூருவோம்

ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை
ஸ்ரீ சுப்பிரமணியம் அச்சகம்

235. கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


## மண்டை தீவிலிருந்து

2-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்ந்த கறுப்பையா ராஜா (வயது 25) என்பவர் காயமடைந்தார்- அவர் உடனடியாக யாழ்- வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். தினமும் பண்ணைக்கடற்பரப்பில் படையினரால் துப்பாக்கி பிரயோகம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது. 59-சி

# இன்றுஉதைபந்தாட்டஇறுதி போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவந்த உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டியின் இறுதியாட்டம் இன்று அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த இறுதியாட்டத்தில் நாவாந்துறை சென் நீக்கிலஸ் கழகமும், குருநகர் பாடும்மீன் கழகமும் மோதுகின்றன. வெற்றிபெறும் கழகத்துக்கு பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் வைத்தியகலாநிதி ரி. டபிள்யூ ஜெபகுலராஜா பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.

இவ்வைபவத்துக்கு சிறப்பு விருந்தினராக விளையாட்டு அபிவிருத்திக் குழுச் செயலாளர் திரு. எஸ். முருகநேசன், வலி கிழக்கு உதைபந்தாட்டச்சங்கத் தலைவர் திரு எஸ். ரி கணநாதன் மற்றும் அமரர் குமரையா குடும்பத்தினர் ஆகியோர் கலந்துகொள்வர். -வி

## விசேட அபிஷேகம்

(அரியாலை)

ஏழாலையம்பதி அருள்மிகு பெரியதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் இன்று புதன்கிழமை இரவும் நாளை வியாழககிழமை காலை விசேட அபிஷேக ஆராதனையும் தீக்குளிப்பு வைபவமும், மகேசுவர பூசையும் இடம்பெறவுள்ளது. - 59

## படையினர் சுட்டு ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் படையினரின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகிய ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் வேளையிலேயே இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. க-இ

## இராணுவ

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பத்திரிகையாளர்கள் போர் முனைச் செய்திகளை எடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. -இ

## கொழும்பில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வைத்துப் புலிகள் தாக்கலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது சில வி ஐ. பி. அரசியல்வாதிகளுக்கு உயிராபத்து அதிகளவில் ஏற்படலாம் என்றும் புலனாய்வுத்துறையினர் எச்சரித்துள்ளனர். இதையடுத்து அவர்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி படை அலுவலகங்களின் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது சி ரி

## கடற்படையினருக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வழி மூலமாகவே விநியோகங்களை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

இவற்றை உடனடியாக பெறுவதற்கான நடவடிக்கையில் கடற்படைத்தளபதி ஈடுபட்டுள்ளார். கடற்புலிகளினால் படையினர் மிகப்பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்குவதால் கடற்படையை உயர் நிலையில் வளப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம். சி-ரி

## கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிகேடியர் சரத் முனசிங்க (முன்னாள் இராணுவ பேச்சாளர்) தலைமையில் கொழும்பு நகரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன நகரின் சகல வாசல்களும் வீதித்தடைகள் போடப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன நகரின் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மிக நவீனரக தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்பு படுத்தப்பட்டு பாதுகாப்பு நிலைமைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. -சி-ரி


# தமிழீழ சட்டக்கல்லூரி

கல்வி ஆண்டு 1995 - 1996

## மாணவர்களுக்கான விண்ணப்பம் கோரல்

தமிழீழ சட்டக்கல்லூரியின் மேற்படி ஆண்டுக்கான பயிற்சி விரிவுரைகள் நடைபெற இருப்பதால் இக்கல்வி நெறியைப் பயில்வதற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளை உடைய மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

காலம்: மூன்று வருடங்கள்

கல்வித்தகைமை :

★ க. பொ. த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க பொ. த சாதாரணப் பரீட்சையில் தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடஙகளில் திறமைச்சித் திபெற்றிருத்தல் வேண்டும்.

வயது 19 — 35

★ விண்ணப்பம் செய்ய விரும்புவோர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை கோண்டாவில் பொற்பதி வீதியில் உள்ள நீதி நிர்வாகத்துறையில் நடுவப் பணியகம், வன்னி, மன்னார், முல்லைப் பிரதேச நீதி நிர்வாகத்துறை கிளை நடுவப்பணியகம், தமிழீழ மாவட்ட நீதிமன்றுக்களின் செயலகங்கள் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். இவ்விண்ணப்படிவங்களைப் பூர்த்தி செய்து 30 - 05 - 1995-ம் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நடுவப் பணியகம்
நீதி நிர்வாகத்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
கோண்டாவில்
யாழ்ப்பாணம்

(ஏ-4894)



பேரறிஞர் தந்தை செல்வா நாமம்
என்றும் நிலைத்திருக்கும்

பாலாஜி புத்தகசாலை

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.



தந்தை செல்வாவின் இலட்சியக் கனவை வென்றெடுப்போம்
பல்லாண்டு அவர் நாமம் ஒலிக்கும்

ஜெயா அழகு மாடம்

மொத்தவியாபாரம்:
187 இராசன் வீதி,
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.

சில்லறை வியாபாரம்
177 A, இராசன் வீதி,
(மின்சார நிலைய வீதி)
யாழ்ப்பாணம்.



தமிழ் மொழி செழிக்கவும் தமிழர் தன்மானத்துடன் வாழவும்
தமிழர் சுயநிர்ணய உரிமைகளைப் பெறவும் ‘தமிழீழம்’ ஒன்றே தீர்வு என
முழங்கியவர் தந்தை செல்வா
அவரின் 18ஆவது நினைவு தினத்தை ஈழத் தமிழராகிய யாம்
அனைவரும் நினைவு கூருவோமாக

அண்ணா கோப்பி

யாழ்ப்பாணம் - சுன்னாகம் - இணுவில் - திருநெல்வேலி.

## வெளிநாடுகளிலிருந்து ஆயுதம் கொள்வனவு செய்ய பணமின்றி
# இக்கட்டான நிலையில் படையினர்

(கொழும்பு)

இராணுவ தளபாடங்களை உடனடியாக வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்வதற்கு அரசிடம் போதிய பணம் இல்லாததால் படையினர் பெரும் இக்கட்டுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாம்.

மோதல் தவிர்ப்பு அமுலில் இருந்தபோது இராணுவ தளபாடங்களை அரசு கொள்வனவு செய்யவில்லை எனவும் தற்போது யுத்தம் மூண்டுள்ளதால் படையினருக்கு அவசரமாக பல இராணுவ தளபாடங்கள் தேவை எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் பாதுகாப்பு அமைச்சுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட மேலதிக நிதியை உடனடியாக ஒதுக்கக்கூடிய நிலையில் அரசு இல்லையென அரசு கைவிரித்து விட்டது. எனினும் தற்போது விமானப் படைக்கு தேவையான ஹெலிகொப்டர்களை வாங்க விமானப்படை உயர் அதிகாரிகள் குழுவொன்று ரஷ்யா சென்றுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் மாநாட்டிற்கு சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா அங்கு கிடைக்கும் நிதியுதவி மூலம் படையினருக்கான தேவைகளை பெருமளவில் பூர்த்தி செய்வாரென பாதுகாப்பு வட்டாரங்கள் கருதுகின்றனவாம். சி-ரி

# யுத்த நிறுத்தம் செய்து பேச்சை ஆரம்பியுங்கள்

(கொழும்பு)

யுத்த நிறுத்தம் ஒன்றை உடனடியாக மேற்கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்குமாறு தேசிய கத்தோலிக்க குருமார் மாநாடு இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் விநயமாகக் கேட்டுக் கொள்ளும் அறிக்கை ஒன்றினை வெளியிட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: 'மற்றொரு யுத்தத்துக்கு நாடு ஈடுகொடுக்கமுடியாது. இதனை இரு தரப்பினரும் புரிந்துகொண்டு மோதல் தவிர்ப்பு நடவடிக்கையை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கவேண்டும்.' [ம-சி-ரி

# உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டது

[கொழும்பு]

எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தல் அடுத்த வருடம் ஜனவரிவரை ஒத்திபோடப்படலாம் என நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

உணவு கூட்டுறவு உள்ளூராட்சி மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் இது தொடர்பாக அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் அறியப்படுகிறது. [88-ரி]

# தமிழ் ரெஜிமென்டைச் சேர்ந்த பலரும் கொழும்பில் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் மீண்டும் கைதுசெய்து விசாரிப்பதற்கு பொலிசாருக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்: குற்றப் புலனாய்வு பணியகம் (C.D.B) பல்வேறு குழுக்களை அமைத்து தீவிர கண்காணிப்பு, தேடுதல், கைதுசெய்தல் போன்ற நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

குற்றப் புலனாய்வு பணியகத்திற்கு ஜனாதிபதி செயலகம் வழங்கிய பணிப்புரையை அடுத்தே குற்றப் புலனாய்வு பணியகம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது, அண்மையில் குற்றப் புலனாய்வுப் பணியகத்தினால் தமிழ் ரெஜிமெண்டில் இருந்த சிலரும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர்,

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து செயற்படுவதற்கும், ஐ.தே.க. அரசியல் வாதிகள் தங்கள் தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளவும் தமிழ் இளைஞர்கள் சிலரைக் கொண்டு தமிழ் றெஜிமண்ட் உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பில் செயற்பட்டவர்கள் அநேகமானோர் இன்று கைவிடப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட இத் தமிழ் றெஜிமண்டில் கடமையாற்றியோரில் ஒரு சிலர் இராணுவ உயர் அதிகாரிகளுடன் இணைந்து பாஸ் எடுத்து வட பகுதிக்கு தடை செய்யப்பட்டிருந்த பொருட்களை அனுப்பி இலட்சக் கணக்கில் உழைத்தார்கள். ஆனால் இதிலும் கூடுதலாக இலாபம் தேடிக் கொண்டவர்கள் இராணுவ உயர் அதிகாரிகளே.

இப்போது கைதுசெய்யப்பட்டிருக்கும் தமிழ் றெஜிமண்டைச் சேர்ந்தவர்களிடமும் சம்பந்தப்பட்ட இராணுவ உயரதிகாரிகள் அனுப்பிய பொருட்களின் தொகை என்பன பற்றியும் விசாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட கொழும்பில் தமிழர்களை கைது செய்யும் படலம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. அண்மையில் மருதானைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் முன்னர் பொலிசாருடன் இணைந்து தமிழ் இளைஞர்களை காட்டிக் கொடுத்தவராவார்.

ஆனால் இவ் இளைஞர் கைது செய்யப்பட்டபோது 'உங்களுக்கு விசுவாசமாக எத்தனையோ வேலைகளை செய்துள்ளேன். என்னுடைய பாஸ் இது' எனக்காட்டியுள்ளார். ஆனால் பாஸைக் கிழித்தெறிந்த பொலிசார் ஒரு நாள் இவரை தடுத்து வைத்துவிட்டு பின்னர் அனுப்பினர் எனவும் அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. க-சி

# மட்டுநகரில் 6மணிக்குப்பின் நடமாட மக்களுக்கு தடை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் மாலை 6-00 மணிக்குப்பின் பொது மக்கள் எவரும் வீதிகளில் நடமாடக்கூடாதுஎன விசேட அதிரடிப் படையினர் பணிப்புரை விடுத்துள்ளனர். செட்டிபாளையம், குருக்கள் மடம் போன்ற பகுதிகளில் ஒலிபெருக்கிகள் மூலம் இப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை காலை மாவட்ட செயலகங்களிற்கு வருகை தந்த திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டு படையினரால் சோதனைக்குள்ளாக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதனால் திணைக்கள தலைவர்கள் பலர் காலதாமதமாக அலுவலகங்களுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது;

மட்டக்களப்பு நகரில் வசிப்பவர்களின் விபரங்கள் வீடு வீடாக திரட்டப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. க-ரி

# இளாலி படகு விபத்து ஐவர் படுகாயம்

(கொழும்பு)

இளாலிக் கடலில் இடம்பெற்ற படகு விபத்தின்போது ஐவர் படுகாயம் அடைந்துள்ளனர். நேற்று முன்தினம் படகுச் சேவையில் ஈடுபட்டிருந்த இரு படகுகள் நேருக்குநேர் எதிரும் புதிருமாக மோதியபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயம் அடைந்தோர் விபரம் வருமாறு: சந்தியா பிள்ளை மிசிசியா - வயது 29 குருநகர். ஜெ ஹூஜீஸ், 1ம் குறுக்குத் தெரு, குருநகர். லூ மெமன்சன் - வயது 8, 1ம் குறுக்குத் தெரு, குருநகர். டேவிட் ஜொன்சன் வயது 17, 1ம் குறுக்குத் தெரு, குருநகர். டேவிட் அருளம்பலம், 1ம் குறுக்குத் தெரு, குருநகர்.

மேற்படி ஐவரும் பளை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 156 சி ரி

## வாகரையில் தமிழ்குடிமகன் படையினரால் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கடந்த 3ம் திகதி மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் தமிழர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தால்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஆண்டான்குள பிரதேசத்தில் வேட்டைக்குச் சென்றவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. ஆண்டான்குளத்தைச் சேர்ந்த சிவநேசன் மர்மநாதன் என்பவரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். ரி

## வரவு-செலவுத்

(1ம பக்கத் தொடர்ச்சி)

மளவு பணம் தேவை எனவும் கூறி அமைச்சர்களின் உதவியை நாடினார். இதையடுத்து வரவு - செலவுத்திட்டத்தில் ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்ட பல கோடி ரூபாவில் பெருமளவு நிதியை இதற்காக தாங்கள் தருவதாக சகல அமைச்சர்களும் ஒட்டு மொத்தமாக ஒததுக்கொண்டனராம்.

நாட்டில் எழுந்துள்ள தேசிய பிரச்னைக்காக இந்த நிதியை தாங்கள் இராணுவ தளபாட கொள்வனவிற்காக திருப்பி விடவும் அவர்கள் பூரண சம்மதம் தெரிவித்ததுடன் சகல நிலைமைகளுக்கும் ஜனாதிபதிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைச்சர்கள் உறுதியளித்தனராம்.

சி-ரி

## அளவெட்டியில் கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப்பகுதியில் நிலை கொண்டுள்ளசிறிலங்கா ராணுவத்தினர் நேற்றுப்பகல் மக்கள் இருப்பிடங்களை நோக்கி 50 கலிபர் துப்பாக்கி பிரயோக தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலையடுத்து இப் பகுதியில் நேற்றுப் பெரும் பதற்றம் ஏற்பட்டது. ரி

## சமாதான சுமுகநிலை மீண்டும் ஏற்படும்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மோதல் ஆரம்பித்தாலும்கூட இன்னமும் சமாதானத்திற்கான வாய்ப்பு முற்றாக மறைந்துவிடவில்லையென ஐரோப்பிய நாட்டு இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதாக தினகரன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மேலும் அப்பத்திரிகை தெரிவிக்கையில், ஒருவார காலத்திற்கு முன் உள்ள சுமுகநிலை தற்போது இல்லாவிட்டாலும் கூட அத்தகைய சுமுகநிலை மீண்டும் தோன்றுமெனக் கூறுவதற்கில்லை எனவும் தெரிவித்துள்ளது. [து-ரி]

## இன்று தந்தை செல்வா நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 18வது நினைவுதினம் இன்று 26ம் திகதி புதன்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் அமைந்திருக்கும் தந்தை செல்வா நினைவாலயத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இன்று காலை 8 மணிக்கு தந்தை செல்வா நினைவாலயத்தில் மலர் அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

இதேசமயம் இன்று ஆலயங்களில் விஷேட வழிபாடுகளும் நடைபெறவுள்ளது.

- 162

## பூநகரி

(1-ம பக்கத் தொடர்ச்சி)

படை முகாம்கள் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சநிலை தோன்றியுள்ளது கிழக்கில் தற்போது புலிகளின் பலம் பெருமளவில் அதிகரித்திருப்பதாகப் படையினர் நம்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சி ரி

## பாதுகாப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சில நாட்கள் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளார். சமாதான சூழ்நிலை என்பதாலேயே, பல தடவைகள் மறுத்த பின் இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலர் பதவியை ஏற்றிருந்தார். ஆனால் தற்போது யுத்த நிலைமை தோன்றியுள்ளது.

தற்போது இவர் தனது அலுவலக கடமைகளை குறைத்துள்ளார். எனினும் எதிர்வரும் நாட்களில் இவர் இந்த வருத்தத்துடன் திறம்பட செயற்படுவார் என்பது சந்தேகமே என கருதப்படுகிறது. -சி-ரி

## மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடத்தல்தீவு ஆறும் வட்டாரத்தைச் சேர்ந்த எட்வேட் அடைக்கலமுதது என்ற பெண்ணே இச்சம்பவத்தில் பலியானவர்களில் ஒருவர் என அடையாளம் காணப்பட்டார்

இதேவேளை மணலாறுப் பகுதியில் நேற்று புக்காரா விமானங்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டு வீச்சுக்களை நடத்தின.

இரு புக்காரா விமானங்கள் நேற்றுக்காலை 6.00 மணியளவில் இப்பகுதிக்கு மேலாக வட்டமிட்டுக் கொண்டு வந்து மோசமான தாக்குதலை நடத்தின.

காலை வேளையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதினால் வீடுகளிலிருந்த மக்கள் சிதறி ஓடினர்; இத்தாக்குதலில் பல வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. -ரி

## மிதிவெடியில் சிக்கி சிப்பாய் காயம்

(மட்டு. நகர்)

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் ரோந்து சென்ற இராணுவ சிப்பாய்களில் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது மொறக்கொட்டாஞ்சேனை பகுதியிலிருந்து சந்திவெளி நோக்கி இராணுவம் சென்று கொண்டிருந்தபோது மிதிவெடிவெடித்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ரி

## மட்டு பெரிய போரதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலின் போது படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் இதுவரை தெரியவரவில்லை. விடுதலைப்புலிகள் தரப்பில் இழப்பேதும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. -ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper a the General Post office Sri Lanka under Licence number B 1633613.